# நமது ஈழநாடு

www.namathueelanadu.com





குரல் 03 மலர் 23 ஜூலை 2022 மின்னஞ்சல்:: contact@namathueelanadu.com இணையம்:: www.namathueelanadu.com




"இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப - வரலாற்று ஓட்டத்திற்கு அமைய கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான, புரட்சிகரமான படைப்புகளை உருவாக்கவேண்டும்"

*-தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app



# கண்டங்கள் கடந்தாலும் தாய் தேசத்தின் காற்றையே சுவாசிக்கும் பத்திரிகை



ஊடகங்கள் இன்று எத்தனை நவீன வடிவங்களை எடுத்தாலும் பாரம்பரிய வெகுசன ஊடகமாகிய பத்திரிகை தனக்குரிய இயல்வையும் சிறப்பையும் என்றும் இழக்கவில்லை. ஆனாலும், தற்கால தொழில்நுட்பத்தின் மாற்றங்களோடு இணைந்து பயணிக்கும் வகையில் தோற்றம் பெற்ற இணைய பத்திரிகைகளில் ஒன்றான "நமது ஈழநாடு" இரண்டாவது ஆண்டை நிறைவு செய்கின்ற இவ்வேளையில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கண்டங்கள் கடந்து போனாலும், தாய் தேசத்தின் காற்றையே சுவாசித்துக் கொண்டு, ஈழத்தின் கலை, பண்பாட்டோடு அரசியல், ஆன்மீகம் என்று பல விடயங்களை தாங்கி, தடைகளை தாண்டி வெற்றியோடு நடை போடும் இந்த பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் உவகை அடைகின்றேன்.

இன்னும், இணைய பத்திரிகை வளர வேண்டும் என்றும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் கைகளில் இப்பத்திரியை தவழ்ந்து, உள்ளத்து உணர்வுகளை தொட வேண்டும் என்றும் ஆசித்து என் இனிய வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

**மேதகு ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், யாழ் ஆயர்**



## ஜனநாயகத்தின் மூன்றாவது தூணாக நெடுநாள் பணியைத் தொடரவேண்டும்

நவீன உலகின் இற்றைப்படுத்தப்பட்ட கால ஓட்டத்திற்கேற்ப தன்னை மெருகேற்றிப் புதுப்பித்துக் கொண்ட நமது ஈழநாடு ஊடகம், மின்னிதழ் வழியாக தனது வாசகர்களை சந்திக்க ஆரம்பித்ததன் ஈராண்டு நிறைவை இப்போது கொண்டாடுகின்றது. நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

இன்றைய உலகின் தொடர்பாடல்கள் அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனோடு தொடர்புடைய அத்தனையும் அதற்கேற்பவகையில் மாற்றமடைய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படுள்ளன. ஈழநாடு இந்நிலையை சரியாக இனங்கண்டு புதிய மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு பயணிக்கிறது. 2002 ஆம் ஆண்டு தனது ஊடகப் பயணத்தை அச்சுப்பதிப்பாக ஆரம்பித்த நமது ஈழநாடு 2005 இல் பல்வேறு தரப்பினரிடமிருந்து பல்வேறு வடிவங்களிலான அச்சுறுத்தல்ளையும் அதன் பணிக்குழாத்தின் அங்கத்தவர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட மர்மகொலைகள் என்ற பெரும் சவால்களையெல்லாம் எதிர்கொண்ட போதிலும் துவண்டுவிடாது ஒடுங்கிவிடாது இன்றுவரை தனது ஓட்டத்தை நிறுத்தாது தமிழ் பேசும் ஊடக உலகில் தனக்கானதொரு முத்திரையை பதித்துள்ளது. தெளிந்த சிந்தனையுடன் நேரிய பார்வையுடன் வாசகர்களுக்கு ஜனநாயகத்தின் மூன்றாவது தூணாக நெடுநாள் ஈழநாடு தனது பணியைத் தொடரவேண்டும்.

**Dr.M. கணேசமூர்த்தி**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**பொருளியற்துறை**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

## பரந்துவிரிந்த பணி தொடரவேண்டும்

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக் குரலாக செயற்படும் 'நமது ஈழநாடு' மூன்றாவது ஆண்டில் கால்பதிக்கும் நிலையில் அதன் பரந்து விரிந்த பணி தொடரவேண்டும்

புலம்பெயர் தேசத்தில் பல்வேறு ஊடகங்கள் தமிழ் மக்களின் குரலாய், அவர்களின் விடுதலையின் குரலாய் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், நமது ஈழ நாடும் தங்களுயை பணியை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றது.

அந்த ஊடகப்பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதோடு, நடுநிலையின் பால் நின்று உண்மைகளை உரக்ககூறி விடுதலைக்கான பயணத்தில் முழுமையான ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் வழங்க எனது வாழ்த்துக்கள்.

**சுரேஷ்பிரேமச்சந்திரன்**
**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர்**





## செய்திகளை மட்டுமல்ல உதவிக்கரமும் நீட்டும் நமது ஈழநாடு

நவீனகால ஓட்டத்திற்கேற்ப தன்னை புதுப்பித்துக்கொண்டு மின்னிதழ் வழியாக வாசகர்களை இரு வருடங்களாக சந்தித்து 3 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் நமது ஈழநாடு மின்னிதழுக்கு வாழ்த்துக்கள்.

தமிழர்கள் தடம் பதித்துள்ள அனைத்து பகுதிகளுக்கும் இலகுவான வகையில் இலத்திரணியல் பத்திரிகையாக வலம் வந்து கொண்டிருக்கும் நமது ஈழநாடு மின்னதழ் நமது தாய் நாட்டின் நடப்புக்களை மட்டுமன்றி பல்சுவை விடயங்களை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் தாயக உறவுகளுக்கான புனித செயலான உதவிக்கரம் என்னும் அளப்பரிய சேவையையும் மாதந்தோறும் செய்துவரும் நமது ஈழநாட்டின் ஊடக சேவை சிறப்புற வேண்டுமென்று மகிழ்வுடன் வாழ்த்தி ஆசிகள் கூறிநிற்கின்றேன்.

**அன்ரன் துஸியந்தன்**
**அருட்தந்தை, பிரித்தானியா**

## தமிழ் மக்களின் மனமறிந்த ஊடகம்



ஊடகப்பரப்பில் தமிழ் மக்களின் மனமறிந்த ஊடகமான நமது ஈழநாட்டின் மின்னிதழ் பத்திரிகை இரண்டாவது அகவைவிழா காணுதல் சிறப்பு ஊடகப்பரப்பில் பல்வேறு ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றபோதும் நடுநிலை தவறாது தேசியத்தின் பால் பற்றுறுதியுடன் பயணிக்கும் ஊடகங்கள் விரல் விட்டு எண்ணக்கூடியதாகவே உள்ளன. அந்த வகையில் நமது ஈழநாடு தமிழின விடுதலைப் பயணத்தில் முக்கியமான பணிகளை ஆற்றியுள்ளது.

அந்தப்பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதோடு, தமிழ் மக்களின் குரல்கள் சர்வதேசத்திற்கு ஓங்கி ஒலிப்பதற்கும் முழுமையான பங்களிப்பினை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் நல்லக வேண்டி வாழ்த்துகின்றேன்.

**அனந்தி சசிதரன், ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயலாளர்நயகம்**



# கோமாளி கோத்தபாயவை தோற்கடித்த வரலாற்றின் வெற்றி நாயகன் பிரபாகரன்



தீபச்செல்வன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்று இருந்திருந்தால் ஸ்ரீலங்கா அரசியல்வாதிகள் பைத்தியத்தனமாக நடந்து கொள்ள மாட்டார்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியிருந்தமை கடந்த வாரத்தில் ஸ்ரீலங்காவை அதிரச் செய்திருந்தது. ஈழ மக்களுக்கு எதிரான போரில் இனப் படுகொலையாளியாக பங்கு வகித்த ஒருவரே இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள் குறித்து பேசியமை சிங்கள மக்கள் மத்தியில் உள்ள மனநிலையின் வெளிப்பாடு என்றுதான் கூற வேண்டும். சில சமயத்தில் வஞ்சத்தனமாக சரத்பொன்சேகா தலைவர் குறித்த கருத்துக்களை கூறி வந்தாலும் வரலாற்றின் வெற்றி நாயகன் தலைவர் பிரபாகரன் அவர்களே என்பதை ஸ்ரீலங்காவின் இன்றைய நிலை எடுத்தியம்புகிறது.

கடந்த 2019ஆம் ஆண்டில் மாபெரும் தேர்தல் வெற்றி நாயகனாக தன்னை அறிவித்தார் அன்றைய ஸ்ரீலங்கா அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச. 2015இல் மகிந்த ராஜபக்ச குடும்பம் ஆட்சி அதிகாரத்தை இழந்தது. 2009இல் ஈழ மக்களுக்கு எதிரான மேற்கொண்ட மாபெரும் இனப்படுகொலையை 2010 தேர்தலில் போர் வெற்றியாகக் காட்டி மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றார். என்றாலும் அவருடன் இணைந்த தரப்புகளால் மகிந்த ராஜபக்ச 2015இல் தோற்கடிக்கப்பட்டார். அதிகார வெறியும் தமிழ் இனத்தை அழித்து ஒழித்துவிட வேண்டும் என்கிற வெறியும் கொண்ட ராஜபக்ச குடும்பத்தில் மகிந்த ராஜபக்ச அரச தலைவராக போட்டியிட முடியாத நிலையில் கோத்தபாய ராஜபக்ச தேர்தலில் களம் இறங்கினார்.

கடந்த காலங்களில் மகிந்த ராஜபக்ச போரில் தாம் ஈட்டிய வெற்றியைப் பற்றியே எப்போதும் பேசுவார். தலைவர் பிரபாகரன் பற்றியும் புலிகள் இயக்கம் பற்றியும் பேசி அதனையே அரசியல் உள்ளீடாக மாற்றிய நிலையில், மகிந்த ராஜபக்சவின் தோல்விக்குப் பிறகு, கோத்தபாய ராஜபக்சவும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக நடாத்திய யுத்தம் குறித்தும் அதில் தமிழ் மக்களை கொன்று பெற்ற வெற்றி குறித்தும் பேசினார். கோத்தபாயவும் யுத்த வெற்றியை முன்னிலைப்படுத்தி தன் அரசியலை மேற்கொள்ளத் துவங்கிய தருணத்தில் அரச தலைவர் தேர்தலில் அறுபத்தொன்பது லட்சம் வாக்குகளைப் பெற்று வென்றார்.

கோத்தபாய ராஜபக்ச, அரச தலைவராகியதும், மகிந்த ராஜபக்ச பிரதமராக பதவி ஏற்றார். அத்துடன் ராஜபக்ச குடும்பத்தினர் மீண்டும் இலங்கை அரசியலுக்குள் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டனர். 2009இல் தமிழ் மக்களுக்கு பாரிய இனப் படுகொலை அநீதியை புரிந்த போதும் 2015இல் பாரிய தோல்வியை தழுவிய போதும் 2019இல் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியமையின் வாயிலாக இனி யாரும் தம்மை அசைக்க முடியாது என்று ராஜபக்ச குடும்பம் இறுமாப்புக் கொண்டது. கடந்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செலயாளராக செயற்பட்ட கோத்தபாய ராஜபக்ச இராணுவ சிந்தனை கொண்ட சர்வாதிகார ஜனாதிபதியாக செயற்படத் துவங்கினார்.

உர இறக்குமதித் தடை, வாகன இறக்குமதித் தடை என பல பிழையான பொருளாதார தீர்மானங்களை சர்வாதிகாரமாக பலரது விமர்சனங்களுக்கு மத்தியில் நடைமுறைப்படுத்தினார் கோத்தபாய. உர இறக்குமதி தடையால் இலங்கைத் தீவின் நெல் உற்பத்தி பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்தது. இது மாபெரும் பஞ்சத்தை ஏற்படுத்தும் என்று பலரும் எச்சரித்த போதும் மண்ணை காக்கவே இந்த திட்டம் என்று கோத்தபாய தூர நோக்கு இல்லாமலும் நிகழ்கால சூழ்நிலையைப் புரியாமலும் பேசினார். அடுத்தடுத்து எடுத்த பொருளாதார தீர்மானங்கள் கோத்தபாயவின் நிர்வாகத் திறனின்மை, மாத்திரமின்றி அவரால் இலங்கைத் தீவு மாபெரும் பஞ்சத்தையும் அவலத்தையும் எதிர்கொள்ளப் போகின்றது என்பதை இலங்கைத் தீவின் மக்கள் உணர்ந்து அச்சமுற்றனர்.

பாரிய எதிர்ப்பினை கோத்தபாய எதிர்கொண்ட சமயத்திலும் கூட போர் வெற்றியைப் பேசி சிங்கள மக்களையே மிரட்டினார். எனக்கு இன்னொரு முகம் இருக்கிறது என்றும் புலிகளை நந்திக்கடலில் நாயைப் போலச் சுட்டு இழுத்துச் சென்றேன் என்றும் கோத்தபாய இறுமாப்புடன் பேசினார். ஒரு அரச தலைவராக இருந்து கொண்டு இன அழிப்பு குறித்து இவ்வாறு பகிரமங்கமாக பேசியது இப்போது விடுதலைப் புலிகளை எச்சரிக்கை செய்ய அல்ல. தமிழ் மக்களை எச்சரிக்கை செய்ய அல்ல. சிங்கள மக்களை எச்சரிக்கவே கோத்தபாய இவ்வாறு பேசினார். போரில் வென்றோம், புலிகளை வென்றோம் என்று பேசியே அரசியல் செய்துவிடலாம், எல்லாவற்றையும் செய்துவிடலாம் என்று தப்புக் கணக்கு போட்ட ராஜபக்ச குடும்பத்திற்கு காலம் பெருத்த சாட்டை அடியை வழங்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடிப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்கள், பிரபாகரன் ஆட்சியில் தமிழ் மக்கள் இப்படி கஷ்டப்படவில்லை என்றும் இலங்கை நாட்டை கோத்தபாயவிடம் கொடுத்ததிற்குப் பதிலாக தலைவர் பிரபாகரனிடம் கொடுத்திருந்தால் இந்த நிலை எமக்கு வந்திராது என்று சிங்கள மக்களே கூறினர். சின்னஞ் சிறிதாக வெடித்த மக்கள் போராட்டம் பாரிய அளவில் எழுச்சி கொள்ளத் துவங்கியது. இதன் முதல் கட்டத்தில் மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக பாரிய ஆர்ப்பட்டம் முன்னெடுக்கப்பட்டு அவரின் அதிகார மாளிகை முற்றுகையிடப்பட்ட நிலையில் கடந்த மேதத்தில் பிரதமர் பதவியை இராஜினமாச் செய்து மகிந்த ராஜபக்ச காணமல் ஆகிப் பதுங்கினார்.

அடுத்த கட்டமாக கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிரான போராட்டம் இம் மாதம் எழுச்சி கொண்டது. நாளுக்கு நாள் இலங்கை பொருளாதாரம் வரலாறு காணாத மோசமான நிலைக்கு தள்ளப்பட்ட நிலையில் மக்கள் அதற்கு எதிராக வெகுண்டெழுந்து பாரிய எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். இந்த நிலையில் கோத்தபாய அரச தலைவராக இயங்கிய ஜனாதிபதி மாளிகை கடந்த எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் முற்றுகையிடப்பட்டது. மக்களின் தாக்குதலுக்கு அஞ்சி கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் மாளிகையில் இருந்து தப்பி ஓடி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் பதுங்குகுழிக்குள் மறைந்து கொண்டார்.

மக்களின் கடுமையான அழுத்தத்திற்கு மத்தியிலும் தேடலிற்கு மத்தியிலும் காணாமல் போயிருந்த மகிந்த ராஜபக்ச மாலதீவிற்கு தப்பிச் சென்று அங்கிருந்து சிங்கப்பூருக்கு தப்பிய நிலையில் தன் அரச தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார். உயிரை பாதுகாக்க ஒரு கொலைகாரனாக, கொள்ளைக்காரனாக சொந்த இனத்தாலேயே கோத்தபாய விரட்டியடிக்கப்பட்டுள்ளார். தன் இனத்தின் விடுதலைக்காகவும் தன் இனத்தின் உரிமைக்காகவும் போராடிய தலைவர் பிரபாகரன் அவர்களை தமிழர்கள் தெய்வமாக கருதுகின்ற நிலையில் சிங்கள மக்களும் அதனை இன்றைக்கு உணர்ந்து ஏற்கின்ற நிலையில், கோத்தபாய ராஜபக்ச ஒரு கோமாளியாக தோற்றுள்ள சூழலில் வரலாற்றின் வெற்றி நாயகனாக தலைவர் பிரபாகரன் அவர்கள் விளங்குகின்றமை வெளிப்படையானது.

# பயணத்தில் ஈராண்டுகள்

பூகோல மாற்றத்திற்கேற்ப அனைத்தும் தன்னை புதுப்பித்துக் கொண்டாலே அதன் பயணம் உயிர்ப்புடன் தொடரும் என்பது நிதர்சனம். அந்தவகையில் ஊடக அரங்கில் தற்கால தொழில் நுட்ப மாற்றங்களோடு இணைந்து பயணிக்கும் புதியதொரு பயணத்தை இணையப் பத்திரிகையாக காலடி எடுத்துவைத்த நமது ஈழநாடு மின்னிதழ் இரண்டாவது அகவை கண்டு மகிழ்கின்றது.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் உரிமைக் குரலாக தினசரி பத்திரிகையாக தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது ‘நமது ஈழநாடு’. ஊடக தர்மம் தவறாது நடு-நிலையுடன் செய்திகளை வழங்கி தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்தது.

காலகாலமாக ஊடக சுகந்திரம் மறுக்கப்பட்ட இலங்கைத்தீவில் இன அடக்குமுறைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்த இப்பத்திரிகையின் துணிச்சல் கண்டு ஆடிப்போன இலங்கை அரசு தனது இரும்புக் கரத்தை நமது பத்திரிகை மீதும் பிரயோகிக்கத் தவறவில்லை. யாழ். நாவலர் வீதியில் அமைந்திருந்த நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தை 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று அத்துமீறி சோதனை நடத்தி கடமையிலிருந்த ஊழியர்களை அச்சுறுத்தி உடமைகளை தீ வைத்தும் கொழுத்தியது.

இந்த அச்சுறுத்தல்கள் கண்டு துவண்டுவிடாத எமது பத்திரிகை தொடர்ந்து வெளிவந்த போது அடக்குறையின் உச்சக்கட்டமாக எமது பத்திரிகையின் ஊடக வியலாளர்களான செல்வராஜா ரஜிவர்மன் (ஏப்ரல் 20007) மற்றும் சகாதேவன் டிலக்சன் (ஆகஸ்ட் 2007) ஆகிய இருவரும் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 03 மலர் 25 ஜூலை 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com




இவ்வாறு நமது ஈழநாடு பத்திரிகையின் குரல்வளை தொடர்ந்து நசுக்கப்பட்டு வந்த நிலையில் ஏனைய பணியாளர்களின் உயிர்களை பாதுகாக்கும் வகையில் பத்திரிகை அலுவலகம் இடைநடுவே தன் சேவையை தற்காலிய நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

எனினும் தனது உரிமைக் குரலை எவராலும் மௌனிக்க செய்துவிட முடியாது என்ற கர்வத்துடன் மீண்டும் இணையவழியில் தனது சேவையயை தொடர்ந்து இற்றைவரை தமிழ் பேசும் இணையத்தள உலகில் நமது ஈழநாடு தனக்கோர் தனித்துவம் கொண்டு மிளிர்வது யாவரும் அறிந்ததே!

இந்நிலையில் நமது ஈழநாட்டின் மற்றுமொரு பரனாமமான இணையப்பத்திரிகை குரல்-03 மலர்-25என்றஇலக்கைதொட்டுஇவ் வெளியீட்டில் 2 ஆவது அகவை விழாக்காணுகின்றது.

இது வெறுமனே ஒற்றைச் சாதனையல்ல பொறுப்பாசிரியர்கள், நமது ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் வாசகர் உங்கள் அனைவரதும் வெற்றியே!

எமது மின்னிதழ் எல்லோர் போலும் வெறுமனே கட்டுரைகளையும் செய்திகளையும் பக்கங்கள் முழுவதுமாக நிரப்பி தந்து விடுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. நமது ஈழநாட்டின் உதவிக்கரம் என்றதொரு உன்னத தளத்தை ஆரம்பித்து தமிழர் தாயகம் எங்கெல்லாம் வாழ்வாதரா உதவிகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் மாதந்தம் உதவிக்கரம் நீட்டிவருகின்றது. இதனை பொறுப்பாற்றலுடன் செயற்படுத்தி வரும் பொறுப்பாசிரியரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான கீத்குலசேகரம் பாராட்டுதலுக்குரியவர்.

இவ்வாறு நமது ஈழநாடு மின்னிதழ் தனது இருவருடகால பயணத்தில் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு ஒரு போதும் நின்றுவிடாது உலகில் தழிழ் பேசும் திசைகள் எல்லாம் இணைய வழியூடாக பயணித்து மாதாந்தம் ஒருமுறை உங்களோடு உறவாடிவருகின்றது.

இந்த பயணம் உங்கள் அனைவரின் ஆசிகளுடனும் ஒத்துழைப்புக்களுடனும் மிக நீண்டதொரு பயணமாக தமிழ்த்தேசிய நறுமணத்துடன் தொடரும்.

**ஆசிரியர்**
**ப.சுகிர்தன்**

# ஈராண்டுகள் நிறைவில்...


ஈழநாடு
தமிழீழத்தை என் கண்களாவது பார்க்கட்டும்
சுமந்திரன் ஏன்
தமிழர் தாயகத்தில் தடம்புரளும் கட்சிகள்
திலீபம்
தடைகள் நீங்க மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
விடுதலைப் புலிகள் மீதான தடை தவறு!
எமக்காய் எரிந்த சூரியர்கள்
Send Gifts to Srilanka
தீ தின்ற தேசத்தில் விடுதலைத் தீ
நினைவேந்தல் எமது உரிமை!
போர் தந்த பசி ஆறுமுன்
அகவை
1
கோட்டாபயவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு
அபகரிப்பை நிறுத்து!
இங்கிலாந்தில் ஒரு யாழ்ப்பாணம்
தொலைத்தவரை தேடுவோம் தோட்டாக்கள் பாய்ந்தாலும்
புலிகளில்லா காட்டிற்குள்...

# தமிழினத்தின் தோல்வி

**தாயகன்**









தென்னிலங்கையில் நடைபெற்ற இந்த ஆட்சிமாற்றத்தின்போது தோல்வி கண்ட தரப்பாக மாறியுள்ளது தமிழ்த் தேசியத் தரப்புத் தான்.

முதலில் தமிழ்த் தேசியத் தரப்பு தமக்குள் ஒன்றுபட முடியாமையால் பேரம் பேசும் சக்தியை இழந்து நின்றது. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு அணியாகவும் (அதற்குள் நான்கு அணிகள் உள்ளன), விக்னேஸ்வரன் தனி நபராகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பிறிதொரு அணியாகவும் நின்றனர்.

இந்த மூன்று தரப்பினரும் தனித் தனியாகவே முடிவுகளை எடுத்தனர். இதனால், இந்த முடிவுகள் தாக்கத்தைச் செலுத்தியதா இல்லையா என்பதற்கு அப்பால் இந்த முடிவுகளால் தோல்வி கண்டது அத்தரப்புக்கள் அல்ல. ஒட்டுமொத்த தமிழினமும் தான்.

முதலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழமைபோலவே, ரணிலும் வேண்டாம், சஜித்-டலஸ் கூட்டும் வேண்டாம் என்று கூறி வாக்கெடுப்பை புறக்கணிப்பதாக அறிவித்துவிட்டது.

ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால், தமிழ் மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கிய கோரிக்கை ஆவணத்தினை இரு தரப்பிடமும் முன்வைத்து பேரம் பேசியிருக்கலாம். அதனை அத்தரப்புச் செய்யவில்லை.

அதேநேரம், ஆறு கட்சிகள் இணைந்து ஜனாதிபதி வேட்பாளர்களிடத்தில் பேரம்பேசுவதற்காக தயாரிக்கப்பட்ட ஆணவத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்களிப்புச் செய்யவில்லை.

ஆக, தமிழ்த் தேசியத்தில் பற்றுறுதியாக இருக்கும் முன்னணி தொடர்ந்தும் அரசியலில் தீட்டுப்பார்த்துக் கொண்டிருப்பதும், மொத்த வியாபாரம் செய்யமுனைவதும் பொருத்தமானது அல்ல.

அதற்கு அடுத்தாற்போல, விக்னேஸ்வரன். இவர் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியபோது, ரணிலை கடுமையாக விமர்சித்தவர். புதிய இடைக்கால ஜனாதிபதி தெரிவின்போது, அதே ரணிலுக்குத் தான் ஆதரவளித்திருக்கின்றார்.

அதற்கு அவர் கூறும் காரணம், விசித்திரமானது, தன்னிடத்தில் ஆறுகட்சிகள் இணங்கிய ஆவணம் தரப்பட்டதாகவும், அதனை ரணில், சஜித் ஆகியோரிடத்தில் வழங்கி அவர்களின் இணக்கப்பாடுகளின் அடிப்படையில் முடிவினை எடுக்குமாறும் ஏகோபித்து தெரிவிக்கப்பட்டதாக கூறுகின்றார்.

ஆனால், இவர் ரணிலிடத்தில் மட்டும் தான் குறித்த ஆவணத்தை வழங்கியுள்ளார். அதன்போது ரணில் வெறுமனே நல்லவிடயம் இதனை முன்னெடுப்போம் என்று பொதுப்படையாக தெரிவித்துவிட்டார். கூடவே செல்வம் அடைக்கலாதனையும் அழைத்து நீங்களும் இணைந்து இதனை தயாரித்துள்ளீர்கள் வரவேற்கத்தக்கது என்று ரணில் முழு அரசியல்வாதியாகவே பிரதிபலித்துள்ளார்.

வெறுமனே இந்த வார்த்தைகளை நம்பித்தான் விக்னேஸ்வரன் ரணிலுக்கு ஆதரவளித்துள்ளார். அத்துடன், சஜித் போட்டியில் இருந்து பின்வாங்கியதால் அவரிடத்தில் ஆவணத்தை கையளிக்கவில்லை என்றும், டலஸிடம் ஆவணத்தை வழங்குமாறு தன்னிடத்தில் யாரும் தெரிவிக்கவிலலை என்றும் சப்கைக்கட்டு கட்டுகிறார் விக்னேஸ்வரன்.

ஆனால், முன்னதாக, சஜித் தலைமையில் நடைபெற்ற எதிக்கட்சிகளின் கூட்டத்தில் பங்கேற்ற விக்னேஸ்வரன், சஜித் ஜனாதிபதியானால், டலஸ் பிரதமர் என்ற கலந்துரையாடலினை செவிமடுத்துக்கொண்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறிருக்க, விக்னேஸ்வரனின் கூட்டணியில் உள்ள சுரேஷ்பிரேமச்சந்திரன் ஊடக செவ்வியில், டலஸ் அகழப்பெருமவே வெற்றிபெறும் நிலையில் உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். அப்படியென்றால் கூட்டணியின் தலைவர் ஏன் வெற்றிபெறாதவருடன் உடன்பாட்டைச் செய்தார். வெற்றி பெற இருப்பவரை ஏன் அவர் அணுகவில்லை என்ற கேள்விகள் இயல்பாக இங்கு எழுகின்றன.

அதுமட்டுமன்றி இந்தக் கூட்டுக்குள்ளும் கூட்டு முடிவுகள் இல்லை என்பதும் வெளிப்பட்டுள்ளது. ஆக, கூட்டமைப்பில் மட்டுமல்ல விக்கி அணியிலும் கூட்டு முடிவு என்பது இன்னமும் எட்டாக்கனியாகவே உள்ளது.

அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. வழமையைப் போன்றே வேட்பாளர்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. அவர்களின் வேலைத்திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை என்று காலங்கடத்திய கூட்டமைப்பு, ஜனாதிபதி தெரிவுக்காக வாக்களிப்புக்கு முதன்நாளில் நாடாளுமன்றக்குழுவை கூட்டியது.

கூட்டம் ஆரம்பித்தது முதல் இறுதி வரையில், ரணில் வந்தால் ரஜபக்ஷக்கள் வந்துவிடுவார்கள் என்று திரும்பத்திரும்ப மந்திரம் போல் சொல்லிக்கொண்டிருந்தார் சம்பந்தன். சுமந்திரன், தனக்கு ரணிலுடன் இருக்கும் மோதலில் வெற்றிபெறும் நோக்கிலும், சஜித்துக்கு அளித்த வாக்குறுதியின் பிரகாரமும் டலஸை ஆதரிக்கும் முடிவினை எடுப்பதை நோக்கி காய்களை நகர்த்தினார்.

அடிமுடி தெரியாத சாணக்கியனும், சுமந்திரனுக்கு தாளம்போட்டுக்கொண்டிருந்தார். ராஜபக்ஷ முகாமிலிருந்து வந்த சாணக்கியன் ராஜபக்ஷக்களை கடுமையாக விமர்சித்துக்கொண்டிருந்தமையும், ரணிலின் அரசியல் அனுபவத்தினை வயதில் கூட கொண்டிராத சாணக்கியன் ரணிலின் கடந்தகாலம் பற்றி கூறியமையும் அங்கிருந்தவர்களுக்கு வியப்பை ஊட்டியது.

இவ்வாறிருக்கையில், சுமந்திரன் தனது இலக்கை அடைவதற்காக அமெரிக்காவையும், இந்தியாவையும் பயன்படுத்த முனைந்தார். டலஸ், சஜித் கூட்டை இரு நாடுகளும் ஆதரிப்பதாக கூறினார். கூட்டமைப்பும் அந்த முடிவையே எடுக்க வேண்டுமென அந்த நாடுகள் குறிப்பிட்டதாகவும் கூறினார்.

ஈற்றில் வாதங்கள் எழவும், இந்திய பிரதி உயர்ஸ்தானிகருக்கு தொலைபேசி அழைப்பெடுக்க, அவரும் தமது நிலைப்பாடு அதுவே என்று பதிலளிக்க குறித்த விடயம் ரணிலின் காதுகளுக்குச் சென்றுவிட அது டெல்லி வரை சென்று விவகாரமாகிவிட்டது.

அதுமட்டுமன்றி, உள்நாட்டு ஊடகங்களும் அதனை பிரசுரிக்க டலஸுக்கு ஆதரவளிக்கவிருந்த விமல், உதய, வாசு போன்று கடும்போக்குவாதிகளை சிந்திக்க வைத்துவிட்டது. அத்துடன், இந்திய இராஜதந்திர தரப்புக்களுக்கும், சுமந்திரனுக்கும் இடையில் கசப்புணர்வையும் ஏற்படுத்திவிட்டது.

தொடர்ந்தும் சுமந்திரன் டலஸ்,சஜித் வக்காளத்து வாங்கவும், ஏனைய உறுப்பினர்கள் எழுத்துமூல உடன்பாட்டை கோரினர். பெயருக்காக சுமந்திரன் சஜித், டலஸ் ஆகியோரை அழைத்து பத்து விடயங்கள் அடங்கிய வெறும் வெள்ளைத்தாளில் கை-யால் எழுதப்பட்ட விடயங்களுக்கு கீழ் கையொப்பம் இடப்பட்டது.

இதனையொரு உடன்பாட்டு ஆவணமாக கருதி மறுதினம் டலஸை ஆதரிப்பதாக கூட்டமைப்பு தீர்மானித்தது. இந்த உடன்பாட்டு விடயமும் காட்டுத்தீயாக பரவியதும், ஈற்றில் அது டலஸுக்கு ஆப்பாகவே முடிந்திருக்கின்றது.

ஈற்றில் கூட்டமைப்பு எடுத்த ஏகோபித்த தீர்மானம் எதிர்மறையான விளைவினையே ஏற்படுத்தியுள்ளது. டலஸை ஆதரித்தமைக்கும் ஆயிரம் நியாயங்கள் கூறலாம். ரணிலுக்காக ஏற்கனவே நீதிமன்றப்படிக்கட்டுக்கள் ஏறியதை மறந்து அவரை எதிர்த்தமைக்கு ஆயிரம் காரணங்களை கோடிடலாம்.

ஆனால், இருதரப்பையும் நிராகரித்து வாக்களிப்பில் பங்கெடுக்காது விடும் தீர்மானத்தையோ அல்லது வாக்குகளை செல்லுபடியற்றதாக்கும் தீர்மானித்தையோ ஏன் எடுக்கவில்லை என்ற வினாவிற்கு கூட்டமைப்பினால் பதிலளிக்க முடியாது. தென்னிலங்கையின் ஏதேவொரு முகாமை ஆதரித்ததால் அடைந்த பயன் என்ன? என்பதற்கும் பதிலில்லை.

ஆதனைவிட, வேடிக்கையென்னவென்றால் கட்சித் தலைவர் மாவையே, கூட்டமைப்பு எடுத்த முடிவையும், இந்தியாவை தீர்மான விடயத்தில் இழுத்துவிட்டதையும் கடுமையாக விமர்சிக்கின்றார். ஆனால் அவர், தலைமையின் இயலாமை தான் கட்சியின் தற்போதைய நிலைமைக்கு காரணம் என்பதை இன்னமும் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

ஆகவே, கூட்டமைப்ப பெரும்பான்மை உறுப்புக்களை கொண்டிருந்தாலும், தீர்மானங்கள் எடுக்கும்போது அனைத்து தரப்பினருடன் கலந்தாலோசித்து தீர்மானிப்பதே பொருத்தமானதாக இருக்கும். அதுவே அரசியல் தந்திரோபயமும் கூட.


அதனைவிடுத்து, தனிநபர்களின் விருப்புக்களுக்கு வெறுப்புக்களுக்காக ஒட்டுமொத்த கூட்டமைப்பையும் திசைதிருப்பி எடுக்கப்படும் தீர்மானங்களால் பின்னடைவு கூட்டமைப்புக்கு மட்டுமல்ல. ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் தான்.

மேலும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதே ஒரே இலக்கு என்று கூறிவரும் இந்த மூன்று தரப்புக்களும் தமக்குள் இணக்கப்பாட்டை ஏற்படுத்தினால் 14 பிரதிநிதித்துவங்களைக் கொண்ட (தற்போதைக்கு) ஒரு தரப்பாக மாறிவிடமுடியும்.

அவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டால் அது பேரம்பேசும் சக்தியை எவ்வளவு தூரம் மேம்படுத்தும் என்பது பற்றி சிந்திக்காமலிருப்பது சுயநல அரசியலின் வெளிப்பாடாகவே கொள்ளவேண்டியுள்ளது.

இந்த நிலைமைகள் நீடித்தால் விரைவில் தாயகத்தில் ‘கூட்டமைப்பு கோ கோம்’ உருவாக்கும் நிலையே ஏற்படும்.

# ரணிலின் புதிய முகம்



**தேசிகன்**

'அரசியல் என்பது சதுரங்க விளையாட்டை விட மேலானதொரு விளையாடடு. கிரிக்கெட் போன்ற ஒரு கூட்டுவேலை அவசியம். மரதன் ஓட்டத்தில் பங்குபற்றுவதை விட அதிகமான நெகிழ்ச்சியான ஆற்றல் தேவை. இது றகர் போன்ற கடுமையானது. குத்துச்சண்டை போல இரத்தம் சிந்தலுடன் தொடர்புடையது'

இந்த வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர் சிறிலங்காவின் எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவே.

'மிஸ்டர் கிளீன்' என்று அழைக்கப்பட்ட அவர் இப்போது 'மிஸ்டர் பீன்' என்று அழைக்கப்படுகின்றார். அவ்வளவுக்கு தரம் தாழ்ந்தது போனமைக்கு காரணம் அவருடைய அரசியல் சேர்க்கை தான்.

ஆனாலும், ஜனநாயக கட்டமைப்புக்களைத் தாங்கும் தூணான சட்டவாக்கத்துறையின் பிரதான அங்கமாக பாராளுமன்றத்தின் ஊடாக தனது இலக்கை ரணில் அடைந்துவிட்டார். 134 வாக்குகளைப் பெற்ற ரணில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட டலஸ் அகழப்பெருவை வெற்றி கொண்டுள்ளார்.

சுதந்திர சிறிலங்காவின் முதலாவது அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் படுதோல்விக்குப் பின்னர் கிடைத்த தேசியப் பட்டியல் மூலமாக சுமார் ஓராண்டுக்குப் பின்னர் நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்து, பிரதமராகி, பதில் ஜனாதிபதியாகி இப்போது ஜனாதிபதியும் ஆகிவிட்டார் ரணில்.

1977ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி பியகம தொகுதியில் முதற்தடவையாக போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். சரியாக 45ஆண்டுகளுக்குப் பின்னர் 2022ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கின்றார்.

இரண்டு திகதிகளும் ஒன்றாக அமைந்தமை தற்செயலானதா இல்லை காலத்தின் கட்டாயமா என்பது ஒருபுறமிருக்கையில், தென்னிலங்கையில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக எழுந்த மக்கள் அலையால் ராஜபக்ஷக்கள் அதிகாரக் கட்டிலில் இருந்து இறக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் தென்னிலங்கை அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்படவில்லை.

அவர்கள் தமது பதிலியான ரணில் விக்கிரமசிங்கவை அதிகாரக் கட்டிலில் பிரதியீடு செய்துள்ளனர். இப்போது, ரணிலுக்கும் ராஜபக்ஷக்களை தவிர்த்து விடமுடியாது, அதேபோன்று ராஜபக்ஷக்களுக்கும் ரணிலை தவிர்த்து விடமுடியாது.

ஏனென்றால் இருதரப்பும் ஒன்றிலொன்று தங்கியிருக்கின்றது. குறிப்பாக, அதிகாரத்தை இழந்த ராஜபக்ஷ தரப்பு தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இருந்தால் ரணில் விக்கிமசிங்க அதிகாரத்தில் இருக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க தனிநபர். அவரை விட்டால் அவரது கட்சியில் பிரதிநிதித்துவமே கிடையாது. ஆகவே, நாடாளுமன்றில் இன்னமும் பெரும்பான்மையை தக்கவைத்துள்ள ராஜபக்ஷ குடும்பம் ரணிலை இயக்குவது இலகுவதானது அல்லது ரணிலின் மீதான பிடி தம்மிடமே உள்ளதென நம்புகின்றது.

அதனைவிடவும், அரசியலில் எதிரும் புதிருமாக இருந்தாலும் ரணிலுக்கும், மஹிந்தவுக்கும் இடையில் உள்ள 'கனவான் அரசியல் நட்பும்' காரணமாக உள்ளது. குறித்த நட்பு நான்கு தசாப்தங்களுக்கு அதிகமானது. இவையும், ரணில், ராஜபக்ஷக்கள் இணைவில் தாக்கம் செலுத்துகின்றன.

அதேநேரம், ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்த வரையில் தனது 45வருட கால அரசியலில் 6தடவைகள் பிரதமராக வந்தபோதும் எட்டித்தொடமுடியாதிருந்த ஜனாதிபதி பதவியை இம்முறை வெறும் 134வாக்குகளுடன் அடைந்திருக்கின்றார்.

69இலட்சம் வாக்குகள் பெற்ற ஒரு தலைவர் பதவியில் இருந்து விரட்டியடிக்கப்பட, மக்கள் ஆணையே பெறாத ஒரு தலைவர் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்த அந்த அரியாசனத்தில் அமர்வதை 'அரசியல் சாணக்கியம்' என்பதை விட என்னவென்று கூறுவது.

ஆனால், சாணக்கியங்களைத் தாண்டி, ரணிலின் பதவியேற்பு என்பது, அரசியல் காலாசார மாற்றத்தை எதிர்பார்த்த தரப்பினருக்கு பாரிய ஏமாற்றமாகவே அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி போராட்டக்காரர்களுக்கும் தோல்வியை ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தினை விட்டு வெளியேறும்போது, வாகனத்தொடரணியை இடைநிறுத்தி பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த படையினருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

அதனைவிட, போராட்டங்களில் ஈடுபட்டவர்களை அடக்கும்போது ஏற்பட்ட மோதல்களில் பாதிக்கப்பட்ட படையினரைச் சென்று பார்வையிட்டார். தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார். இவை அனைத்துமே, படைகளை மையமாக வைத்த செயற்பாடுகளாகும்.

ராஜபக்ஷக்கள் மீது படைகளுக்கு அதிக விசுவாசம் இருந்தாலும், கடந்த போராட்டங்களின்போது, அது பெரிதாக வெளிப்படவில்லை. அதுவே கோட்டா வெளியேறுவதற்கு மூலகாரணமாகவும் அமைந்தது என்பதை நன்கு புரிந்துள்ளார் ரணில்.

அதன்காரணத்தினாலேயே படைகளை தன்வசப்படுத்தும் முயற்சிகளை அவர் எடுத்திருந்தார். அதில் அவர் வெற்றியும் கண்டுள்ளார். ஏனென்றால், கடந்த 22ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது அதிகாலையிலேயே படைபலப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்போது படைகள் மூர்க்கத்தனமாக நடந்துகொண்டுள்ளன. அது ரணில் மீதான படைகளின் விசுவாத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த தினம் நண்பகல் ஜனாதிபதி செயகத்தை விட்டு வெளியேறுவதாக போராட்டக்காரர்கள் அறிவித்திருந்தபோதும், ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில், பொதுப்பாதுகாப்பு விதியை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்து ஒரு மணி நேரத்தில் படைகளை பரிசீலித்துப் பார்த்தார். அதில் முதற்கட்ட வெற்றியும் கண்டிருக்கின்றார்.

ஆனால், சர்வதேசம் குறித்த தாக்குதல்கள் தொடர்பில் ஆழ்ந்த கவலைகளை வெளியிட்டுள்ளதே தவிர, கண்டனங்களைத் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் ரணில் மேற்குலகின் செல்லப்பிள்ளை என்பது பரமரகசியம். ஆக, ரணிலின் பரிசோதனைக்கு இரட்டை வெற்றியென்றும் கூறலாம்.

அடுத்தகட்டமாக, ரணில் நாடாளுமன்த்தினை ஒத்திவைப்பதற்கு முனைவதாக தகவல்கள் உள்ளன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக, நிறைவேற்று அதிகாரத்தை குறைப்பதற்கான சட்டமூலம் கொண்டுவர வேண்டியுள்ளது.

அவசரகால நிலைமை அமுலில் உள்ளமையால் அதனை நீடிப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளது. இவற்றுக்கெல்லாம் அப்பால் தனக்கு நாடாளுமன்ற பலம் இல்லாமையால் அங்கு தான் விரும்பியதை சாதித்துக் கொள்ள முடியாத நிலைமை உள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதானால் ராஜபக்ஷக்களின் காலடிக்குச் செல்லவேண்டிய நிலைமையே ஏற்படும். அது, தன்மீது ராஜபக்ஷக்கள் 'பிடியை' அதிகரிப்பதற்கு வித்திட்டுவிடும் என்ற கோணப்பார்வையும் ரணிலுக்கு உள்ளது.

ஆகவே, செலவீனங்களை கட்டுப்படுத்துவதன் பெயரால் நாடாளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுறுத்தினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக, அந்த அதிகாரங்களை முழுமையாக ருசிப்பதற்கான சூழுல்கள் ஏற்படும் என்பதே ரணிலின் அரசியல் கணக்காகவுள்ளது.

ஆக, 'அரசியல் நரி' என்ற பட்டப்பெயர் கொண்ட ரணில், நிறைவேற்று அதிகாரத்தில் அமர்ந்தபின்னர் அதனை முழுமையாக ருசிப்பதற்கே விரும்புகின்றார் என்பது தெட்டத்தெளிவாகின்றது. அதற்கான காய்நகர்த்தல்களிலும் அவர் ஈடுபடுகின்றார்.

மேற்குலகின் நண்பர், ஜனநாயகத் தலைவர் என்றெல்லாம் காண்பிக்கப்பட்ட ரணில் தற்போது, தனது கோரமுகத்தினை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டார். இது தான் ரணிலின் புதிய முகம். இந்த முகத்திற்கு முகங்கொடுப்பது தான் தற்பொழுது சிறிலங்கா மக்களுக்கு உள்ள பிரதான கடமையாகின்றது.

அதேநேரம், அரசியலில் தனது மாமனரான ஜே.ஆரின் கைபிடித்து வளர்த்த ரணிலுக்கு, நிறைவேற்று அதிகார அரசியலமைப்பு கைதேர்தந்தது. அதனை உச்சகட்டமாக பயன்படுத்துவார் என்பதில் மாற்றமில்லை. ஆனால் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பது தான் தற்போதைய கேள்வி. இந்தக் கேள்வி காலவோட்டத்தில் கோட்டாபய உள்ளிட்ட ராஜபக்ஷக்களை ஜனநாயக வாதிகளாக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# வாய்ப்பை சரியாக பயன்படுத்துமா தொழிலாளர் காங்கிரஸ்?

**ச.பார்த்தீபன்**

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எதிர்ப்புகளுக்கு மத்தியில் நாட்டைவிட்டு வெளியேறி பதவியை இராஜினாமா செய்த நிலையில், புதிய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில், 52 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்ற அவருக்கு ஆதரவாக 134 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. ஏனைய வேட்பாளர்களான டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும் அனுர குமார திசாநாயக்க 03 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது அமைந்ததோடு, தமிழர் தரப்பின் பங்களிப்பும் புதிய ஜனாதிபதித் தெரிவில் மிக முக்கியமான ஒரு அங்கமாக அமைந்திருந்தது. வடக்கு, கிழக்குத் தமிழர்கள் மாத்திரமன்றி தமிழ் பேசும் முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் இந்த ஜனாதிபதி தெரிவின் (தேர்தல்) போதான செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் அவர்கள் சார்பு மக்களின் மிக முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வினை பெற்றுக்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே பார்க்கப்பட்டது. குறிப்பாக தாம் ஆதரிக்கும் வேட்பாளர் ஊடாக பிரச்சினைகளுக்குத் துரித தீர்வினை பெற்றுக்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக இதனைப் தமது பிரதிநிதிகள் பயன்படுத்த வேண்டுமென்பதே அந்த மக்களின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. இவ்வாறான ஒரு நிலையில் மலையகத் தமிழ் மக்கள் சார்ந்த பிரதிநிதிகள் மேற்கொண்ட தீர்மானங்கள் தொடர்பில் கலவையான கருத்துகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்திருந்தது. அந்த கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், கட்சி உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸுடன் இணைந்த தொழில் நிபுணர்களுடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க சிறந்த தீர்வாக ரணில் விக்ரமசிங்க இருப்பதாக கருத்துகள் முன்வைக்கப்பட்டதாகவும், நீண்ட கலந்துரையாடலின் பின்னர் கட்சியின் மத்திய குழுவின் ஆதரவு கிடைக்கப்பெற்றதை தொடர்ந்தே ரணில் விக்ரமசிங்கவிற்கு காங்கிரஸ் தனது முழுமையான ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற்றதை அடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஜின் தலைவர் செந்தில் தொண்டமான் தனது வாழ்த்துகளை தெரிவித்திருந்தார். மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சி என்ற அடிப்படையில் இறுதி தருணம் வரை பல கோணங்களில் கலந்துரையாடல் நடத்தியே யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக முழுமையாக ஆராய்து தமத கட்சி தீர்மானம் மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறெனினும் மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனையவர்கள் டலஸ் அழகப்பெருமவிற்கே வாக்களித்திருந்தனர். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து செயற்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அந்தக் கட்சியின் தீர்மானத்திற்கு அமையவே வாக்களித்திருந்தனர்.

எதிர்வரும் சுமார் இரண்டரை வருடங்களுக்கு ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கமே ஆட்சியில் இருக்கப்போகின்றது. அரசாங்கம் எவ்வாறு அமையப் போகின்றது என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், மலையக மக்கள் சார்பாக அமைச்சுப் பதவிகள் ஏதும் கிடைக்குமா? அதன் ஊடாக தமது அன்றாட பிரச்சினைகளுக்கு குறிப்பாக பொருளாதார நெருக்கடிகளுக்கு ஏதாவது நிவாரணம் கிடைக்குமா என்ற கேள்வியை மலையகத் தமிழ் முன்வைத்துள்ளனர். ஏற்கனவே இரண்டு மூன்று அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகள் இருந்த காலத்திலேயே அந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையில் எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகின்றது என்ற ஒரு அச்சம் அந்த மக்களை தொற்றிக்கொண்டுள்ளது.

ஜீவன் தொண்டமான் அல்லது மருதபாண்டி ராமேஸ்வரன் உள்ளிட்ட இருவரில் ஒருவருக்கு மாத்திரமே ஏதாவது அமைச்சுப் பதவி கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. எனினும் அதனை உறுதியாக குறிப்பிட முடியாது. ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாக வாக்களித்த 134 பேருமே ரணிலுக்கு எதிரான நிலைப்பாட்டில் தேர்தல் களத்தில் இறங்கி வெற்றிபெற்றவர்கள். ஆகவே அவர்கள் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் திருப்திபடுத்த வேண்டிய தேவை அவருக்கு உண்டு. இந்த நிலையில் சிரேஷ்ட தலைவர்கள் பலர் இருக்கையில் இளம் தலைவர்களான தொழிலாளர் காங்கிரஸின் இருவர் தொடர்பில் ரணில் சிந்திப்பாரா என்பது கேள்விக் குறியே.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் பேசப்பட்டாலும், தனக்கு எதிராக வாக்களித்தவர்களை அரவணைத்துக் கொண்டு ரணில் ஆட்சியை நடத்துவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான தினேஷ் குணவர்தன பிரதமராக தெரிவு செய்யப்படலாம் என்ற தகவல்கள் இப்போதே பரவ ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் சர்வகட்சி அரசாங்கம் என்ற விடயம் கேள்விக்குறியாகியுள்ளது.

ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மலையக பெருந்தோட்ட மக்கள் தமது பிரதிநிதி ஒருவருக்கு அமைச்சுப் பதவி ஒன்று கிடைக்காவிடின் மேலும் நெருக்கடிக்கு உள்ளாவார்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த நிலையில் தாம் ஆதரித்த வேட்பாளர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள நிலையில் அவருடன் கலந்துரையாடி பொருத்தமான ஒரு அமைச்சுப் பதவியை பெற்று மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய பொறுப்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ/க்கு ஏற்பட்டுள்ளது. அதனை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடும் அந்தக் கட்சிக்கு காணப்படுகின்றது. எனினும் அது எந்தளவிற்கு சாத்தியம் என்பது காங்கிரஸின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.



## சிறிலங்கா முதல் சிங்கப்பூர் வரை

# போர் வெற்றி நாயகனின் இரகசிய தப்பியோட்டமும் தலைமறைவு வாழ்க்கையும்



**தந்திரீகன்**

போர் வெற்றி நாயகன் என்ற பெருமையுடன் சிங்கள, பௌத்த பேரினவாதத்தினை வலுப்படுத்த வந்திருந்த கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் சக்திக்கு முன்னால் நிலைகுலைந்து, தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து இரகசியமாக தப்பியோடும் நிலைமையும் சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மையை துறக்கும் துரதிஷ்டமும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், ஜூலை 9 முதல் 14வரையில் சிறிலங்கா விலிருந்து, சிங்கப்பூர் வரை கோட்டாபய தட்டுத் தடுமாறியிருந்த 50 மணித்தியாலங்கள் என்றுமே விசேடமானவை. வரலாற்றில் பதியப்பட வேண்டியவை. அக்காலப்பகுதியில் என்ன நடந்தது. கோட்டபாய எப்படி அமைதியாக வெளியேறினார் என்பதை இன்னமும் பலர் அறிந்திருக்கவில்லை. அதற்கு வாய்ப்புக்களும் குறைவு.

ஆம், கடந்த ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் ரணில் ஆகியோரை பதவி விலகுமாறு வலியுறுத்தி பல இலட்சம் மக்கள் கோட்டை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் கொள்ளுபிட்டி அலரிமாளிகை ஆகியவற்றை முற்றுகையிட்டனர்.

இந்த சமயத்தில் கோட்டாபய ஜனாதிபதி மாளிகை யிலேயே இருந்தார். விசேட பொலிஸ் அதிரடிப்படை உள்ளிட்ட முப்படைகளையும் அவர் நம்பினார். மாளிகை யைச் சுற்றியிருந்த பாதுகாப்பு படைகளையும், வீதித்தடைகளையும் தாண்டி போராட்டக்காரர்கள் வரமுடியாது என்பதில் உறுதியாக இருந்தார்.

போராட்ட தினமான ஜூலை 9 ஆம் திகதி காலை 6.30 மணியாகும் போதும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவை சந்தித்துள்ளார். அவருடன், பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்னவும் உடன் இருந்துள்ளார்.

அதன்போது நடந்த கலந்துரையாடலில், ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவர் எனவும் கண்ணீர்புகை மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியேனும் அதனை அவர்கள் செய்வர் எனவும் ஜனாதிபதி கோட்டாபய நம்பிக்கையுடன் இருந்துள்ளார்.

ஆனால், ஜனாதிபதி மாளிகைக்கு செல்லும் செத்தம் வீதியில் உள்ள வீதித்தடையினை 10.30மணி அளவில் போராட்டக்காரர்கள் தகர்த்தபோது தான் கோட்டாபயவுக்கு அடுத்தகட்டம் சம்பந்தமாக சிந்திக்கும் நிலைமை ஏற்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி மாளிகையின் முன்பாக உள்ள மணிக்கூட்டு கோபுரத்தை அண்மித்த பிரதான வாயில் திசையிலிருந்து தொடர்ச்சியாக கண்ணீர்ப் புகைப்பிரயோகம் பாதுகாப்பு தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளி-யேறிய கோட்டா, கடற்படை தளபதியின் காரில் அவரு-டைய உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்றுள்ளார்.

பின்னர், கடற்படை தளபதியின் உத்தியோகபூர்வ அறையிலிருந்து, வெளியேறிய கோட்டாபய கடற்படை தலைமையகமான - கோட்டை ரங்கள முகாமிலிருந்து சிதுரல, கஜபாகு ஆகிய கப்பல்களில் ஒன்றில் ஏறியுள்ளார். இருப்பினும், இருகப்பல்களுமே திருகோணமலை நோக்கி பயணத்தினை ஆரம்பித்தன.

இதன்போது ஜனாதிபதி மாளிகையின் முக்கிய அதிகாரி கள் ஜனாதிபதியின் பல ஆவணங்கள், பொருட்களுடன் துறைமுகம் ஊடாக குறித்த கப்பலில் ஏறியுள்ளனர்.

பின்னர் திருமலை கடற்படை முகாமில் முதல் நாள் இரவு இருந்துள்ள கோட்டாபய மறுநாளான ஜூலை 10ஆம் திகதி விமானப்படையின் பெல் ரக ஹெலிகப்டரில் அங்கிருந்து கட்டுநாயக்க விமானப்படை தளத்துக்கு சென்றுள்ளார்.

அங்கிருந்தவாறே கோட்டாபய கட்டுநாயக்க ஊடாக டுபாய் நோக்கி பயணிக்க இருமுறை எத்தனித்துள்ளார். அப்போது கடமையிலிருந்த குடிவரவு அதிகாரிகள், அவரை பொதுமக்களோடு வரிசையில் வந்து முறைப்படி விமானத்தில் செல்ல முடியும் என்று அறிவித்த நிலையில், அவர் தயக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான நிலையில், அமரிக்கா செல்வதற்காக கோட்டாபய வீசா விண்ணப்பத்தை முன்வைத்தார். எனினும் அமரிக்கா அதனை நிராகரித்து விட்டது. இதனால் நிலைமைகள் மோசமடைவதை உணர்ந்த கோட்டாபய கட்டுநாயக்க விமானப்படை தலத்திலிருந்து வீரவில விமானப்படை தளத்துக்கு சென்று அங்கிருந்து மத்தளை விமான நிலையம் ஊடாக தனியார் ஜெட் விமானத்தில் செல்ல திட்டமிட்டார்.

இத்திட்டத்தினை ஜூலை 12ஆம் திகதி முன்னெடுக் கப்பட்டது. கட்டுநாயக்க விமானப்படை தளத்திலிருந்து வெளியேறிய கோட்டாபயவால் இரத்மலானை விமானப்படை தளம் வரையே செல்ல முடிந்துள்ளது. அதற்கு அப்பால் அவரால் நகர முடியாமையால் மீண்டும் கட்டுநாயக்க விமானப்படைத்தளத்திற்கே திரும்பியுள்ளார்.

ஈற்றில் எவ்வாறாவது வெளியேறிவிட வேண்டும் என்ற நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்துள்ள அமைந்துள்ள விமானப்படை தளத்தில் தனது மனைவி அனோமா ராஜபக்ஷ மற்றும் இரு பிரதான பாதுகாப்பு அதிகாரிகளுடன் தங்கியிருந்த கோட்டாபய மாலைதீவு நோக்கி இரகசியமாக புறப்படுவதற்கு தயாரானார்.

சமகாலத்தில், தான் நாட்டிலிருந்து பாதுகாப்பாக வெளி-யேறும் வரை பதவியில் இருந்து விலகப்போவதில்லை என்று பிரதமரான ரணிலுக்கு தகவல் அனுப்பியுள்ளார். இதனையடுத்தே மாலைத்தீவுக்கு தப்பிச்செல்வதற்கான வசதிகளை ரணில் ஏற்பாடு செய்தார். பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின் பின்னர், விமானப்படை தளபதி எயா மார்ஷல் சுதர்ஷன பத்திரவின் கட்டளைக்கு அமைய, பிரத்தியேக என்டனோ 32 ரக விமானம் ஏற்படானது.

அந்த விமானத்தை குறூப் கப்டன் வெலகெதர, விங் கொமாண்டர் மல்லவ ஆராய்ச்சி ஆகிய விமானிகள் செலுத்த கோட்டாவும் மனைவியும், இரு பாதுகாப்பு அதிகாரிகளும் மாலைத்தீவு நோக்கிச் சென்றனர்.

இந்த நிலையில் தமது நாடு நோக்கி விமானப்படை விமானம் வருவதை அறிந்த மாலைதீவு அதிகாரிகள் அதில் இருப்பவர்களின் விபரங்களை அறிந்து விட்டு முதலில் விமானத்தை தரையிறக்குவதற்கு அனுமதியளித் திருக்கவில்லை.

இதனால் கோட்டாவும் அவரது மனைவி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் சுமார் ஒன்றரை மணி நேரம் விமானத்தில் காத்திருந்துள்ளனர். எவ்வாறாயினும் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹம்மட் நஷீட் தலையீடுகளைச் செய்தமையை அடுத்து விமானம் தரையிறக்கப்பட்டது.

விமான நிலையத்தில் உள்ள அதிவிசேட பிரதிநிதி களுக்கான விடுதியில் கோட்டாபயவும் ஏனையவர்களும் தங்கவைக்கப்பட்டனர். ஆனால், அவர்களை நாட்டுக்குள் அழைத்துச் செல்வதற்கு மாலைதீவு அரச தரப்பு முயற்சிக்க வில்லை.

காரணம், மாலைதீவில் அதிகாலை 3.30 மனியளவில் தரையிறங்கிய கோட்டா உள்ளிட்டோருக்கு விமான நிலையத்திலிருந்தே எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன. மிகமோசமான வார்த்தைகளைக் கொண்டு அங்கிருந்த இலங்கையர்கள் கோட்டாவை திட்டித்தீர்த்தனர். அத்துடன் போராட்டங்களும் ஆரம்பமாகின.

நிலைமைகள் மோசமடைவதை உணர்ந்த மாலைதீவு அரசாங்கம் கோட்டாபயவை 'சொனேவா புசி' எனும் தீவில் தங்கவைத்தது. அங்கிருந்து டுபாய் பயணிப்பதற்குரிய ஏற்பாடுகள் அவசரமாக முன்னெடுக்கப்பட்டன.

டுபாயில் கோட்டாபயவும், அவரது மனைவியும் தங்குவதற்கான பாதுகாப்பான இடத்தை, ஏற்கனவே அரச உளவுச் சேவை பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே ஏற்பாடு செய்திருந்தார்.

இருப்பினும் டுபாய் செல்வதற்கு தனியார் ஜெட்களையோ விமானங்களையோ வடகைக்கு அமர்த்த முடியாத நிலைமைகள் தொடர்ந்தும் நீடிதத்தது. இதனால் 13ஆம் திகதி இரவு மாலைதீவிலேயே கோட்டாபய கழித்தார்.

குறித்த தினத்தில் தனது பதவி விலகலை அறிவிப்பதாக தெரிவித்திருந்தாலும், அவர் தங்கியிருந்த விடுதியில் தட்டச்சு செய்வதற்கான வசதிகள் இருக்காமையினால் கடிதத்தினை தயாரிக்கவில்லை என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும், பதில் ஜனாதிபதியாகி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் 13ஆம் திகதி நள்ளிரவாகும்போது சவுதி எயார்லைன்ஸூடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து தமது விமானமொன்று 14ஆம் திகதி வருவதாகவும் அது சிங்கப்பூர் செல்லவுள்ளதாகவும் அதில் பாதுகாப்பாக தாங்கள் கோட்டா குழுவினரை கொண்டு செல்வதாகவும் உறுதிப்பாடு அளிக்கப்பட்டது.

அத்துடன், கோட்டாவின் இரு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மேலதிகமாக பயணிகள் போன்று மேலும் சில ஆசனங்களில் மாலைதீவு பாதுகாப்பு அதிகரிகளும் பயணிப்பதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகின.

இந்த செயற்பாடுகளுக்கு பின்னாலும், முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான நஷீட்டே இருந்துள்ளார். இந்நிலையில், எஸ்.வி.788என்ற சவூதி அரேபிய எயார் லைன்ஸூக்குச் சொந்தமான விமானத்தில் சதாரண பயணிகளுடன் சிங்கப்பூர் நோக்கி கோட்டாப ஜூலை 14ஆம் திகதி பயணத்தார்.

சிங்கப்பூரை அடைந்த அவர், தனிப்பட்ட விஜயமாக வருகை தந்துள்ளேன் என்று குறிப்பிட்டதை அடுத்து 14 நாட்கள் தங்குவதற்கு குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர்.

பின்னர், ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையில், முன்னாள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூண மகேந்திரன் கோட்டாபய தங்குவதற்குரிய ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இதற்கு முன்னதாக மருத்துவச் சிகிச்சைக்காக கோட்டாபய சிங்கப்பூர் சென்றபோதும் அர்ஜூண மகேந்திரனை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விமான நிலையத்திலிருந்து பிரத்தியேக வாகனத்தில் வெளியேறிய கோட்டாபய ஏற்பாடு செய்யப்பட்ட தனிப்பட்ட இல்லத்திற்குச் சென்றுள்ளார்.

அங்கிருந்தவாறே, தனது இராஜினாமாக் கடிதத்தினை சாபாநாயர் மஹிந்தயாப்பாவிற்கு அனுப்பி வைத்துள் ளார். அத்துடன் அவருடைய 50மணிநேர தவிப்புடான தலைமறைவு வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில் அவர் எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் அங்கு தங்கிருப்பதற்கு வீசா காலம் காணப்படுகின்றது. அதன்பின்னர் என்ன செய்யப்போகின்றார் என்ற கேள்விகள் இருக்கின்ற நிலையில், தொடர்ந்தும் சிங்கப்பூரில் தங்குவதாக இருந்தால் மீண்டும் வீசா கோரிக்கை உரிய காரணங்களுடன் விடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லாது விட்டால் அங்கிருந்து அவர் வெளி-யேற வேண்டும். அவ்வாறு வெளியேறுவதாக இருந்தால் தற்போதைக்கு அவருடைய தெரிவாக இருப்பது சவூதி அரேபியா தான். அங்கு சென்று அவர் தங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் ராஜ பக்ஷக்களுக்கு நெருங்கிய தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதிக்கான சிறப்புரிமைகள் அனைத்தும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படும் நிலையிலும், தற்போது ராஜபக்ஷக்களின் சகாவான ரணில் ஜனாதிபதி பதவியில் உள்ளமையாலும் கோட்டா அடுத்தவாரமளவில் சிறிலங்காவுக்கே திரும்பலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஸ்ரீலங்காவில் நடந்தது புரட்சியல்ல

# பேரினவாதத்தை காக்கும் யுக்தி

## தமிழ் தேசிய ஆய்வு அமையம்




ஸ்ரீலங்காவில் நடந்தது புரட்சியல்ல என்றும் பேரினவாதத்தை காக்கும் யுக்தி என்றும் தெரிவித்துள்ள தமிழ் தேசிய ஆய்வு மையம், கோத்தா சந்தித்த தோல்வி முள்ளிவாய்க்காலின் சாபமே என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் இலங்கையின் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

**பொருளாதார யுத்தம்**

"ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய இனவழிப்பு யுத்தத்தை நடாத்தி, அந்த யுத்த வெற்றியை வைத்து ஆட்சியைக் கைப்பற்றிய கோத்தபாய ராஜபக்சவுக்கு காலமும் வரலாறும் பொருளாதார யுத்தத்திற்கான களத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. இதனால் ஸ்ரீலங்கா வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. அரசியின் விலை ஐந்நூறு ருபாவை அண்டியுள்ள நிலையில், உலகின் வீழ்ந்த நாடுகளில் ஒன்றாக வறுமை நாடுகளில் ஒன்றாக இலங்கை இணைந்துள்ளது.

மக்கள் பசி பட்டினியால் வாடுகின்றனர். இலங்கையில் எண்பது சதவீதமான பெரியவர்கள் தமது பிள்ளைகளுக்கு உணவை கொடுத்துவிட்டு தாம் பட்டினியில் இருப்பதாக ஐ.நா நடாத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. பசி, பஞ்சத்தால் சமூகக் குலைவுகளும் சீரழிவுகளும் ஏற்பட்டுள்ளதுடன் கல்வி, ஒழுக்க விழுமியங்கள், சமூகப் பண்பாடு என்பனவும் வீழ்ச்சி கண்டுள்ளன. தமிழ் இனத்தை அழிப்பதை ஒற்றை நோக்கமாக கொண்ட ஸ்ரீலங்காவின் அரச கொள்கையின் விளைவாகவே இவ் யுத்தம் ஏற்பட்டுள்ளது.

**முள்ளிவாய்க்காலின் சாபம்**

ஸ்ரீலங்காவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி கோத்தபாயவின் நிர்வாகத் திறன் இன்மையினால் மாத்திரம் விளைந்தது என்று இன்னமும் சிங்கள தேசம் நம்பிக் கொண்டிருந்தால் இந்த வீழ்ச்சி எதிர்காலத்திலும் நிகழும் அபாயம் உண்டு என்பதை தமிழ் தேசிய ஆய்வு அமையம் எச்சரிக்கின்றது. முள்ளிவாய்க்காலில் தமிழ் இனத்தை அழித்ததுடன் பொருளாதாரத்தையும் ஒரு இனவழிப்பு ஆயுதமாக கையாண்டு உணவு, மருந்து, எரிபொருள், அத்தியாவசியப் பொருட்கள் என எல்லாவற்றையும் தடை செய்த ஸ்ரீலங்கா இன்றைக்கு அதையே மறுவினையாக எதிர்கொள்ளுகின்றது.

எந்த நிகழ்வுக்கும் ஒரு எதிர்வினை உண்டு என்று நியூட்டனின் விதி கூறுகின்றது. அதைனையே எல்லா செயல்களுக்கும் மறுவினை என்ற கர்மா உண்டு என இந்துசமய தத்துவம் கூறுகின்றது. ஒரு இனத்தை மாபெரும் இனப்படுகொலை வாயிலாக மனித குலத்திற்கு விரோதமான முறையில் அழித்த ஸ்ரீலங்கா அரசு அதன் சாபமாகவே இன்றைய பொருளாதாரப் பேரிடரை எதிர்கொள்ளுகின்றது என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

**தப்பி ஓடிய கோத்தபாய**

ஈழத் தமிழ் மக்களை அவர்களின் சொந்த நிலத்தில் இருந்து துரத்திய கோத்தபாய ராஜபக்ச இன்றைக்கு நாட்டுக்கு நாடு தப்பி ஓடுகின்றார். மாலதீவு சென்ற கோத்தாவுக்கு எதிராக அங்கும் எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில் இப்போது சிங்கப்பூரில் பதுங்கியுள்ள கோத்தபாயவுக்கு எதிராக அழுத்தம் பிரயோகிக்கப்படும் நிலையில் எங்கு தப்பி ஓடுவது என்று தெரியாமல் கோத்தபாய ராஜபக்ச நிற்கின்றார்.

போராட்டக்காரர்களின் கடுமையான எழுச்சி காரணமாக ஸ்ரீலங்காவின் அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வரலாறு காணாத வகையில் பல லட்சம் மக்கள் ஸ்ரீலங்கா அதிபர் மாளிகையை முற்றுகையிட்டு நடாத்திய போராட்டம், எந்தளவுக்கு அம் மக்களுக்கு நன்மை அளிக்கும் என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். எவ்வாறெனினும் ஈழத் தமிழ் மக்கள் தமது அரசியலின் நிலை குறித்து சுய ஆய்வை சுய விழிப்பை கொள்ள வேண்டிய காலம் இதுவென்பதையும் நாம் நினைவுபடுத்துகிறோம்.

**அடங்குமா பேரினவாத வெறி**

இலங்கையில் ஏற்பட்டது மகத்தமான புரட்சி என்று நாம் ஒருபோதும் கூற மாட்டோம். காலி முகத்திடலில் இருந்து யாரும் தமிழீழம் பற்றி பேசக்கூடாது என்று போராட்ட தரப்பால் கூறப்பட்டது. ஆனால் ஈழத் தமிழ் மக்களுக்கும் ஒரு பிரச்சினை இருக்கிறது என்று அங்கு கூறப்படவில்லை. அல்லது ஈழத் தமிழ் மக்கள் இந்த தீவில் மாபெரும் இனவழிப்பு அவலத்தை எதிர்கொண்டார்கள் என்றும் அங்கு கூறப்படவில்லை.

காலம் காலமாக ஈழத் தமிழ் மக்களை அழித்து ஒழித்து அதனை தின்று பெருத்துள்ள பேரினவாததத்தை பாதுகாக்கவே இப் போராட்டம் நடைபெற்றுள்ளது. சிங்களப் பேரினவாதத்தையும் சிங்கள தேச நலன்களையும் பாதுகாக்க சிறந்த தலைவர் ஒருவரையே போராட்டக்காரர்கள் தேடுகின்றனர். அனைத்து இனங்களுக்கும் பொதுவமான அனைவரையும் ஒன்றாக மதிக்கும் ஒரு தலைவரை அவர்கள் தேடவில்லை. ஆக இப் போராட்டத்தின் வழியிலும் சிங்களப் பேரினவாதமே திரண்டுள்ளது.




**தமிழர்கள் முன்னெடுத்த புரட்சி**

ஈழத் தமிழ் மக்கள் கடந்த அறுபத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஜனநாயக வழியில் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக போராடுகிறார்கள். முப்பது ஆண்டுகளாக ஆயுதம் ஏந்தி மகத்துவமான புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆனால் அப் போராட்டத்தை சிங்கள தேசம் பயங்கரவாதம் என்று சொல்லி ஒடுக்கியமை கசப்பான நிகழ்வாகும். கோத்தபாயவின் பொருளாதார ஒடுக்குமுறைகளை தாங்காமல் சிங்கள தேசம் இன்று கொந்தளிக்கிறது.

ஆனால் ஈழத் தமிழ் மக்கள் கோத்தபாய ராஜபக்ச முதற்கொண்டு கடந்த காலங்களில் ஸ்ரீலங்காவை ஆண்ட அத்தனை தலைவர்கள் முன்னெடுத்த இன ஒடுக்குமுறைகளையும் எப்படி அனுபவித்திருப்பார்கள் என்றும் அதனால் எப்படிப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்றும் சிந்திக்க மறுக்கின்றமை, இவர்கள் வரலாற்றை சரியாக உணர்ந்துகொள்ளவில்லை என்பதுடன் மீண்டும் இதுபோன்ற நெருக்கடிகளை அறுவடை செய்யக் கூடும் என்ற எச்சரிக்கையை விடுக்கவும் எமை நிர்பந்திக்கின்றது.

**இன்னுயிர்களை ஆகுதி ஆக்கினோம்**


ஈழத் தமிழ் மக்கள் தமது இன்னுயிர்களை தியாகம் செய்து, ஆகுதியாக்கி உன்னதமான புரட்சிப் போராட்டத்தை நடாத்தி இருந்தார்கள். அதற்கு சிங்கள தேசம் இன்றும் உரிய பதில் தரவில்லை. அத்துடன் இன்று சிங்கள மக்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டதைப் போன்று தமிழ் மக்கள் செய்தால் சிங்களப் படைகளும் கால்துறையும் அனுமதிக்குமா?

இவற்றை சிங்கள தேசத்தின் புதிய தலைமுறைகள் உணர்ந்துகொள்ள வேண்டும். வரலாறுகளில் இருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழர்களின் உரிமையை அவர்களிடம் வழங்க வேண்டும், அவர்களுக்கு நடந்த அநீதிகளுக்கு நீதியை வழங்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் சிங்கள மக்கள் தமது உரிமைகளுக்காக போராடுவதே நன்மையும் அர்த்தமும் தரும் செயலாக அமையும் என்பதை தமிழ் தேசிய ஆய்வு அமையம் வலியுறுத்தி நிற்கிறது" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உலக பேரழிவு

**பூலோகன்**





ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், உலகம் முழுவதும் உணவுப் பற்றாக்குறை அதிகரித்து வருவதால், உலகம் ஒரு 'பேரழிவை' எதிர்கொள்கிறது என்று எச்சரித்தார்.

2023இல் நிலைமைகள் இன்னும் மோசமாக இருக்கலாம். உலகெங்கிலும் உள்ள விவசாயிகள் உரம் மற்றும் எரிசக்தி விலை உயர்வுகளை சமாளிக்க போராடுவதால் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா முழுவதும் அறுவடைகள் பாதிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர், அந்தக்கூற்றைக் கூறியபோது, பலர் கரிசனை கொள்ளாத நிலையில் இருந்தபோதும் தற்போது நடைமுறையில் ஒவ்வொரு நாடுகளும் சிக்கல்களுக்கு முகங்கொடுகின்றன.

கொரோனாவும், அதனைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள உக்ரேன், ரஷ்ய மோதலும் ஒட்டமொத்த உலகையும் ஆட்டிப்படைக்கும் இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணங்களாகின்றன. அத்துடன், காலநிலை மாற்றம் உள்ளிட்ட இதர காரணங்களும் வெகுவான தாக்கத்தைச் செலுத்துகின்றன.

அதநேரம், கொரோனாவும், உக்ரேன், ரஷ்ய மோதலும் உலக உணவுச் சங்கிலியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திவிட்டன என்பது தான் யதார்த்தம். இதனால் தான் உலகநாடுகள் தடுமாற்றம் காண வேண்டிய நிலைமைகள் வெகுவாக அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக, வளர்ச்சியடைந்த, வளர்ச்சி அடைந்து வருகின்ற நாடுகளில் பொருளாதார ரீதியான தாக்கங்களை மெல்லமெல்ல ஏற்படுத்த ஆரம்பித்துள்ளன. வறுமை நாடுகளின் நிலைமைகள் மேலும் மோசமடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் உலகின் 40 நாடுகளில் உள்ள சுமார் 180 மில்லியன் மக்கள் தவிர்க்க முடியாத உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வார்கள் என்று 2022ஆம் ஆண்டுக்கான உணவு நெருக்கடிகள் பற்றிய உலகளாவிய அறிக்கை தெரிவித்துள்ளது.

இதனால், ஊட்டச்சத்து குறைபாடு, வெகுஜன பட்டினி மற்றும் பஞ்சத்திற்கும் ஆகியன தீவிரமடைவதற்கு வழிசமைக்கும் என்றும் கொரோனா மீட்பு பணிகள் இடம்பெறுவதாலும் மக்கள் இன்னும் கொரோனாவுக்கு எதிராக போராடி வருவதாலும் குறித்த நாற்பது நாடுகளின் அரசாங்கங்கள் கையிருப்பு குறைவாக இருப்பதாலும் உணவு நெருக்கடி அதிகரிக்கலாம் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றின் அண்மைய அறிக்கையின்படி, எத்தியோப்பியா, நைஜீரியா, தென்டான் மற்றும் யேமன் ஆகிய நாடுகள் பேரழிவு நிலைமைகளை எதிர்கொள்ளும் பட்டினி மையங்களாக உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், எத்தியோப்பியா, யேமன், தென்சூ டான், சோமாலியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மொத்தம் 750,000 பேர் ஏற்கனவே பட்டினியால் மரணத்தை எதிர்கொள்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் விசேடமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில், உலக நாடுகளில் தொடர்ந்து பணவீக்கம் அதிகரித்து வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கடந்த 30வருடங்களில் இல்லாத அளவு விலைவாசி அதிகரித்து வருகிறது. மே மாதத்தில் அமெரிக்காவில் பணவீக்கம் 8.6சதவீதமாக உள்ளது.

இந்நிலையில் அமெரிக்கா மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் விலைவாசி உயர்வு உச்சத்தைத் தொட்டுள்ளது. 2022 முதலாம் காலாண்டு நிலவரப்படி, துருக்கியில் பணவீக்கம் உலக நாடுகளிலேயே அதிக அளவில் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. துருக்கியில் பணவீக்கம் 54.8சதவீதமாகவுள்ளது. அது விரைவில் 70சதவீதத்தினை நெருங்கும் என்ற எதிர்பார்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், இஸ்ரேலுக்கு அடுத்து அர்ஜண்டீனாவில் பணவீக்கம் 60சதவீதத்தினை நெருங்கப்போவதாக அந்நாடு அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பணவீக்கம் மிகவேகமாக அதிகரித்து வரும் நாடுகளில் இஸ்ரேல் முதல் இடத்தில் உள்ளது. இஸ்ரேலில் பணவீக்கம் 4.1சதவீதமாகவுள்ளது. இஸ்ரேலுக்கு அடுத்து பணவீக்கம் அதிகரித்து நாடுகளில் இத்தாலி காணப்படுகின்றது. அங்கு 2020 இல் 0.29 சதவீதமாக இருந்த பணவீக்கம் 2022இல் 5.67சதவீதமாக அதிகரித்துள்ளது.

இங்கிலாந்தில் நுகர்வோர் விலை குறியீட்டெண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் மே மாதத்தில் 9.1 சதவீதமாக காணப்பட்ட நிலையில் ஜூன் மாதம் 9.4 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று தேசிய புள்ளியியல் துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 40 ஆண்டுகளாக இல்லாத புதிய பணவீக்க உயர்வு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தெற்காசிய நாடுகளை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் 2022 மே மாதத்தின்படி பணவீக்கம் 15.88சதவீதமாக உள்ளது. அண்டை நாடுகளில் காணப்படும் நிலைமைகளை அடுத்து இந்தியா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன், அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியாவின் தாராள கடன் வழங்கல்களுக்கும் நிபுணர்கள் கட்டுப்பாட்டை விதித்துள்ளதாக டெல்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சிறிலங்காவின் ஜூன் மாத பணவீக்கம் 54.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது அடுத்து வரும் காலப்பகுதியில் 70சதவீதமாக அதிகரிக்கலாம் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க குறிப்பிடுகின்றார். இதனால், சிறிலங்கா, உலகளவில் பணவீக்கமடையும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தினைப் பிடிப்பதற்கான நிலைமைகள் அதிகமாக உள்ளன.

மறுபக்கத்தில், பாகிஸ்தான் நாட்டின் ஜூன் பணவீக்கம் வெளியாகியமையால் அந்நாட்டுக்கு கூடுதலான அதிர்ச்சியை அளித்துள்ளது, மே மாதம் 13.7 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஜூன் மாதத்தில் 21.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது 2008 டிசம்பர் மாதத்தின் 23.3 சதவீத அளவீட்டை காட்டிலும் சற்று குறைவாகவே உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேநேரம், நேபாளத்தின் ஜூன் பணவீக்க தரவுகள் வெளிவராத நிலையில் மே மாதத்தில் மாதத்தில் 7.87 சதவீதமாக காணப்படுகின்றது. கடந்த ஆண்டு இதேமாதம் நேபாளத்தின் பணவீக்கம் 3.65 சதவீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான பின்னணியில் மலேசிய முன்னாள் பிரதமர் மகாதீர் மொஹம்மத் ஆசிய நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர், சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது மற்ற ஆசிய நாடுகளுக்கான எச்சரிக்கை மணி என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடன் கொடுத்தவர்களுக்கு திருப்பிச் செலுத்தும் அளவுக்கு போதுமான நிதி இருப்பைக் கொண்டிருக்கவில்லை என்பதுதான் சிறிலங்காவுக்குள்ள பெரிய பிரச்சினை. மிக மோசமான முதலீட்டுக் கொள்கையும், மோசமான நாணய, நிதி மேலாண்மையும்தான் இதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், ஆசிய நாடுகள் பொறுப்பான நிதிக் கொள்கைகளைக் கையாள வேண்டும் என்றும், அவ்வாறு செயல்படவில்லை எனில் சர்வதேச நாணய நிதியத்தின் பிடியில் சிக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இவ்வாறு ஆசிய நாடுகளுக்கு உதாரணமாகியுள்ள சிறிலங்கா, உலக நாடுகளுக்கும் முன்னுதாரணமாக திகழத் தவறவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டாலினா ஜோர்ஜிவா, சிறிலங்காவில் நிலவி வரும் நிலை குறித்து எச்சரிக்கை விடுத்ததோடு, சிறிலங்கா பிரச்சினையானது மற்ற நாடுகளுக்கு ஒரு எடுத்துகாட்டு என்றும் கூறியுள்ளார். குறிப்பாக கடன் அளவு, கட்டுப்படுத்தப்பட்ட கொள்கை இடைவெளி எனப் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள கூடும் என்ற எச்சரிக்கையை மற்றைய நாடுகளுக்கு வழங்கியுள்ளார்.

உலகத்திற்கு முன்னதாரணமாகியுள்ள சிறிலங்கா எவ்வாறு மீளும் என்பது கேள்வியாக இருக்கையில், ஏனைய உலக நாடுகள் இந்த நெருக்கடிகளில் இருந்து எவ்வாறு தம்மைக் காத்துக்கொள்ளப்போகின்றன என்பது பிரதான கேள்வியாகின்றது. ஏனென்றால் சிறிலங்கா உட்பட பல நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் தான் ஆட்சிகளையே அப்புறப்படுத்தியிருக்கின்றன என்பது விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டியதாகும்.





## நமது ஈழநாட்டின் உதவிக்கரம்








































நமது ஈழநாடு வாழ்வாதார திட்டத்தின் மாதாந்த உதவியாக, யுத்தத்தில் பாதிப்படைந்து வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்ந்து வரும் 18 முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்மாவட்டத்தைசேர்ந்தகுடும்பங்களுக்குவழங்கப்பட்டஇந்த உதவிக்கான நிதியுதவியை லண்டனில் வசிக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்களானதிரு.மனுமயூரன்மனுநீதிமற்றும்திரு.முருகானந்தம் கோவிந்தராஜா ஆகியோர் வழங்கி உதவியிருந்தனர்.

மனித உரிமை செயற்பாட்டாளர் கீத் குலசேகரம் அவர்களால் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்பட்டுவரும் நமது ஈழநாடு வாழ்வாதார திட்டம், இவ்வாறாக முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உதவிகளை மாதாந்தம் தொடர்ந்து செய்து வருவது குறிப்பிடத்தக்கது.